**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல்

முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான "சிறப்பாகத் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

**1.5.2 இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான உள்ளகக் கட்டுப்பாடு**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் செயலாற்றல் பிணையை விடுவிப்பதற்கு எதிராக ஒரு தனியார் கம்பனியால் ரூபா 6,355,550 தொகையை செலுத்துமாறு வேண்டி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அப்பெறுமதிக்கு நிகழத்தக்க பொறுப்பினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் (100) ஆம் பிரிவிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் ரூபா 4.6 மில்லியன் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதானது உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தில் இடம்பெற்றிருந்த குறைபாடுகளின் காரணமாகும். மிகுதிப் பணம் அட்டுறு பொறுப்பாக பதியப்பட்டது. அவர் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுவதாக தெரியப்படுத்தியிருந்தும் எதிர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை என தெரியப்படுத்த விரும்புகின்றேன். | எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் ஏற்படும் வாய்ப்பினை இனங்கண்டு கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செம்மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் பிரகாரம் இறுதி இருப்புக் கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் மிகவும் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 25.1 மில்லியனாக இலகு சராசரி கிரய அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற கணனி முறைமையில் நிறையூட்டிய சராசரி கிரயத்திற்கு இணங்க இருப்பினை மீள் மதிப்புச் செய்வதற்கு தேவையான வசதிகள் இல்லாததனால் இங்கு சராசரி முறைமையில் இருப்பினை மீள்மதிப்புச் செய்தல் ஈடுபடுத்தப்படுகின்றது. இந்த வசதிகள் உள்ள புதிய கணனி முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு 08 | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் பிரகாரம் இறுதி இருப்புக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கைகள் கையெழுத்திடப் பட்டிருந்தது. எதிர்காலத்தில் புதிய கணனி முறைமையினூடாக இச்சிக்கலை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) ரூபா 290,816,686 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க மீள்கணிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்குப் பதிவுகளில் உள்ள முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 786,800,587 ஆக சரிசெய்யப்படுதல் வேண்டும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இற்கு இணங்க முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மாலபே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டிடம் அமைந்துள்ள காணி கிரயத்தின் அடிப்படையில் 5 சதவீதப்படி முன்னைய ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்ததன் காரணமாக ரூபா 2,000,000 தொகை பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்தல் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த தவறு நடைமுறை ஆண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமானத்தேய்விற்கு ஏற்பாடு செய்தல் தொடர்பான செம்மையாக்கலை நடைமுறை ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டவாறு பிழைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட இனங்காணப்படாத வங்கிக்கு | இந்நிலைமையைத் தவிர்த்து உரிய நேரடியாக வங்கியில் வைப்புச் செய்தலினை | வங்கியினூடாக நேரடியாகச் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை |

| | | | |
|---|---|---|---|
| | நேரடியாகச் செய்த செலவு வைத்தல் ரூபா 6,993,491 தொகையினை இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக மேற்கூறிய தொகையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் குறைத்தும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இனங்காண்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் தேவையான முறையான நடவடிக்கைகள் நடைமுறை ஆண்டின் போது எடுக்கப்படும். | தாமதமின்றி நிறுவனத்தின் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ரூபா 9,476,908 தொகையான தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களுக்காக ஐயக் கடனுக்காக ரூபா 1,134,572 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது இதன் காரணமாக நடைமுறை ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,134,572 ஆல் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஐயக் கடனுக்காக ஒதுக்கீடு செய்தலானது உரிய முற்பணக் கணக்கினூடாக செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஐயக் கடன்களுக்கு ஒதுக்கீடு செய்யும் போது ஒவ்வொரு கடன் மீதியையும் தனித்தனியாக பகுப்பாய்வு செய்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 790,816,686 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 786,800,587 ஆக இருந்ததனால் அப்பெறுமதிக்கிடையே ரூபா 4,016,099 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கணக்குப் பதிவுகளிலுள்ள முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 786,800,587 என சரி செய்யப்படுதல் வேண்டும். | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட சொத்துக்களுக்குரிய விபரமான துணைப் பதிவேட்டினை உரிய பெறுமதிகளுடன் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) பல ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 10 விடயங்களை உள்ளடக்கிய ரூபா 14,158,958 கூட்டு மொத்தமான கடன்பட்டோர் மீதியை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் சில விடயங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நிருவாக சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் சிபார்சின் அடிப்படையில் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் சில விடயங்கள் நடைமுறை ஆண்டில் அறவிடப்பட்டுள்ளன. மிகுதி விடயங்களுக்காக நடைமுறை ஆண்டின் போது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தினால் அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) பல ஆண்டுகளாக அறவிட வேண்டியிருந்த வெளிநாட்டு புலமைப்பரிசில் நிபந்தனைகளை மீறிய 20 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 16,889,429 பணத்தை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் ரூபா 4,020,392 பணம் 17 உத்தியோகத்தர் களுடன் சம்பந்தப்படுவதுடன் உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தகர் களுக்குரிய பணத்தை அறவீடு செய்வதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அந்நடவடிக்கைகள் வெற்றியளிக்காமல் போனது அந்த உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டுச் சென்றிருந்த தனாலாகும். அவர்களில் பல பிணையாளர்களும் நாட்டை விட்டுச் சென்றிருந்ததுடன் சிலர் உயிருடன் இருக்கவில்லை. ரூபா 3,789,640 பெறுமதியான உடன்படிக்கைகளை மீறிய | உடன்படிக்கையின் பிரகாரம் தாமதிக்காது உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தேவையான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிக பெறவேண்டியவைகளின் மீதி ரூபா 29,378,901 பணத்தில் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய 448 கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அப்பெறுமதி ரூபா 10,612,617 ஆகும். இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நிறுவனத்தினால் போதியளவு நடவடிகக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடன்பட்டோர் மீதி அதிகரித்துச் செல்வதன் ஊடாக அதிகமாகக் காணப்பட்டதானது SVAT கடன் வவுச்சர்களை சேர்த்துக் கொள்வதாகும். SVT தயாரித்தலானது பயிற்சியாளர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டதுடன் தற்பொழுது காணப்படுகின்ற நிலைமையின் அடிப்படையில் அவ்வாறு பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதும் சிக்கலாக உள்ளது. | நிறுவனத்தினால் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வணிகக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 29,791,016 ஆக இருந்த போதிலும், அம்மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உரிய மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கடிதம் சனவரி மாதத்தின் போது அனுப்பப்பட்டுள்ளது. COVID 19 (கொரனா) தொற்று நிலைமையின் அடிப்படையில் பதில்களை பெற்றுக்கொள்ளுதல் தாமதித்துள்ளது. உரிய உறுதிப்படுத்தலுக்கான பதில்கள் கிடைத்துக் கொண்டு இருக்கின்றன. | வணிகக் கடன் பட்டோரிடமிருந்து அறவிட வேண்டிய பணம் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 03 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக காணப்பட்டுவரும் 6 விடயங்களை உள்ளடக்கிய ரூபா 1,272,918 பெறுமதி கொண்ட அட்டுறுச் செலவுகளைத் தீர்த்து வைப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை டெலிகொம் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொலைபேசிப் பட்டியல்கள் தொலைபேசிச் செலவுக் கணக்கினூடாக கொடுப்பனவு செய்யப்பட்டது. இதனை நடைமுறை ஆண்டின் போது முறையாகச் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கின் மீதி 2007 திசெம்பர் 31 ஆந் திகதி முன்கொண்டு வரப்பட்ட மீதியாகும். இன்றுவரை எதுவித உரிமை கோரல்களும் இடம்பெற்றிருக்காத துடன் எதிர்காலத்தில் இதனை திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>செலுத்த வேண்டிய VAT வரியின் மிகைக் கொடுப்பனவுகள் உரிய நிறுவனங்களுக்கு மீண்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட துடன் உரிமை கோரப்படாத மீதிகளை உரிய முறைப்படி கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொறுப்புக்கள் இல்லாயாயின் வருமானத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை நிதிப் பிரமாணம் 507(2) மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | நிறுவனத்தின் ரூபா 2,952 மில்லியன் தொகையான நடைமுறையற்ற சொத்துக்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் போது பொருட்களை மீளாய்வு செய்தல் இடம்பெற்றிருக்க வில்லை. | இந்நடவடிக்கைகளை மீண்டும் முறைமைப்படுத்தி மிகவும் விரைவாக (2020 ஆகஸ்ட் மாதம் 08 ஆந் திகதி அளவில்) பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நடைமுறையற்ற சொத்துக்கள் உள்ளமை மற்றும் அவற்றின் பெறுமதியை பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தி நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை நிதிப் பிரமாணம் இலக்கம் 395(இ) பிரிவு | ஒரு வங்கிக் கணக்கு உள்ள அனைத்து நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியில் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை சம்பந்தமாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளுக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களைத் தயானிக்க வேண்டிய போதிலும், நிறுவனம் ஒவ்வொரு மாதத்திற்குமாக தனித்தனி மாதாந்த வங்கி கணக்கிணக்கக் | இலக்கம் 395(இ) பிரிவு நிதிப்பிரிவில் காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறை இதற்கு தாக்கமளித்துள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிற்காக அனைத்து வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது எனவும் 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தொற்று நிலைமை காரணமாக இந்த ஆண்டிற்கான வங்கி கணக்கிணக்கக் | இலங்கை நிதிப் பிரமாணம் இலக்கம் 395(இ) பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூற்றுக்களைத் தயாரிக்காது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2019 ஆம் ஆண்டிற்கு ஒரு வங்கி கணக்கிணக்கக் கூற்றை மாத்திரம் தயாரித்திருந்தது. | கூற்றுக்களைத் தயாரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |
| (இ) | இலங்கை நிதிப் பிரமாணத்தின் பிரிவு இலக்கம் 396(ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கு இணங்க கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 11,414,070 ஆகும். அப்பெறுமதியில் 06 மாத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்த ரூபா 1,031,917 தொகையான காசோலைகளுக்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிரிவு இலக்கம் 396(ஈ) இன் பிரகாரம் செல்லுபடியாகும் காலத்தை மிகைத்த காசோலைகளுக்காக இப்பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இந்த ஆண்டில் அது இடம்பெற்றிருக்காததுடன் இந்த ஆண்டின் போது இப்பிரிவிற்கு இணங்க செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை நிதிப் பிரமாணம் இலக்கம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2006 தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) பிரிவு | அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக விபரமான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | விபரமான பெறுகைத் திட்டம் 2019 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்படாததுடன் அதிக பெறுமதியுள்ள மூலதனப் பொருட்களுக்காக உரிய கோவைகளில் விபரமான கால அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. அதனை நாளதுவரையாக்கி இப்பெறுகைக் கோவையை அடிக்கடி பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2006 தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) பிரிவு | பெறுகை நடைமுறையினை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்திலிருந்து முடிவுறுத்தும் வரை ஒவ்வொரு நடைமுறைக்காக கால ஒழுங்கில் விபரத்தை உள்ளடக்கி பெறுகை கால | எதிர்காலத்தில் பெறுகை கோவைக்குரிய விபரமான கால அட்டவணையைத் தயாரித்து நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனம் 2019 ஆம் ஆண்டின் போது அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | 2006 தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11(அ) பிரிவு | விலைமனுக்களைச் சமர்ப்பிப்பவர்களால் பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தின் கீழ் கேள்விப் பிணைகளைச் சமரப்பிக்க வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது பெறுகை செய்யப்பட்ட ரூபா 21,261,119 தொகையான 08 பெறுகைகளுக்காக கேள்விப் பிணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விலை கோரல்களின் கீழ் வெளிநாட்டு வழங்குனர்களுக்கு உள்நாட்டு முகவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கேள்விப் பிணைகளைச் சமர்ப்பிப்பதற்கு அவர்களுக்கு முடியாதுள்ளது. எனினும் நிறுவனத்தில் தேவைப்பாட்டின் அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்தல் அப்போதைக்கு அத்தியாவசியமானதன் காரணமாக உரிய கேள்வியானது தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் திணைக்கள பெறுகைக் குழுவினதும் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்படும். | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.11(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2006 தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4(iii) ஆம் பிரிவு | ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளின் 90 சதவீதம் வரையில் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணங்கள் முழுமையாக அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மாலபே இல் அமைந்துள்ள அலுவலகத் தொகுதிக்காக உணவுச்சாலையை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரருக்கு 2018 யூலை 12 ஆந் திகதி இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பம் வரை முற்பணத்தை முழுமையாக அறவீடு செய்வதற்கு | இதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கொடுப்பனவுக்குரிய பட்டியலில் முற்பணத்தை அறவீடு செய்தல் 100% இடம்பெற்றிருந்தது. எனினும், தற்பொழுது வரை இந்த ஒப்பந்தத்காரருக்கு இறுதிப்பட்டியலுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4(iii) ஆம் பிரிவுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 5(i)(இ) மற்றும் 5(ii) ஆம் பிரிவுகள் | உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பரிசோதனைப் பிரேரணைகள் விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளரின் பங்குபற்றலுடன் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் சிலவற்றின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழுவிற்குச் சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், நிறுவனம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் அமைந்துள்ள உப குழுவின் மூலமும் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் இடம்பெறுவதுடன் திறைசேரி பணத்திலிருந்து கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சிக்காக உத்தேச நிதியம் ஈடுபடுத்தப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளல் இடம்பெறுவதுடன் அவை தொடர்பான சிபார்சுகளை வழங்குதல் நிறுவனத்தின் உப குழுவின் மூலம் இடம்பெறுகின்றது. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளரின் 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5(i)(இ) மற்றும் 5(ii) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஐ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 6(i) ஆம் பிரிவு | திறைசேரி நிதியத்தை ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தாதிருக்க வேண்டிய போதிலும், அதற்காக தேசிய ஆராய்ச்சிக் கவுன்சில் அல்லது தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதி ஏற்பாட்டிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 2015 இலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை 87 செயற்திட்டங்களுக்காக திறைசேரி நிதி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஆராய்ச்சிக் கவுன்சில் அல்லது தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக திறைசேரி நிதி பாதீட்டு அங்கீகாரத்துடன் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்படுகின்றது. | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேகைள் சுற்றறிக்கையின் 6(i) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் | ஆராய்ச்சிகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் ஆராய்ச்சி பிரேரணைகள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயல் முன்னேற்றத்தை உள்ளடக்கிய உப | 6 மாதங்களுக்கு ஒரு தடவை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல் இடம்பெறாதிருந்தும் ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை செயல் முன்னேற்ற மதிப்பீட்டிற்காக Progress | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| 4(ii) ஆம் பிரிவு | ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Presentation நடாத்தப்பட்டது. கணக்காய்வின் பின்னர் 2019 இலிருந்து 6 மாதங்களுக்கு ஒரு தடவை செயல்முன்னேற்ற அறிக்கையைப் பெற்று செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | 4(ii) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா 3,066,925 கூட்டு மொத்தமான 05 வங்கிக் கணக்கு மீதிகள் செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளாக 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பேணப்பட்டு வந்திருந்தன. | 000-0351 ஆம் இலக்க கணக்கு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மட்பாண்டம் செங்கல் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற சில நிறுவனங்களுடன் இணைந்து பேணப்பட்டு வருகின்ற செயற்திட்டம் சம்பந்தப்பட்டதுடன் தற்பொழுது செயற்பாடற்றுக் காணப்படுகின்றதுடன் செயற்திட்டத்தின் மூலம் இப்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு எழுத்துமூலம் வேண்டுதல் விடுவிக்கப்பட்டுள்ளது.<br><br>000-2876-229 ஆம் இலக்க கணக்கு தும்பு சார்ந்த செயற்திட்டமான Coir செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டதுடன் இப்பண மீதி தேங்காய் அபிவிருத்தி சபைக்கு மீண்டும் வழங்க வேண்டிய மீதியாகும்.<br><br>000-9283-122 கணக்கு மற்றும் 000-8174-439 கணக்கு EEPEX செயற்திட்டத்தின் கணக்குகளானதுடன் இச்செயற்திட்டம் தற்பொழுது கைவிடப்பட்டுள்ளது. | நடைமுறைக் கணக்குகளில் செயற்பாடற்றுக் காணப்பட்ட பணம் நிறுவனத்தின் செயலாற்றலுக்காக ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,058,920 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,252,426 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 16,311,346 அல்லது 133 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்பாட்டுச் செலவு அதிகரித்தல் பிரதானமாக காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சபையின் மொத்த வருமானம் 6.94 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மொத்த செலவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மொத்த செலவுகளில் 46 சதவீதம் ஆளணிச் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

2018 ஆம் ஆண்டிற்கான நடைமுறை விகிதம் 2.76 ஆக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அது 1.96 சதவீதமாகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டு மூலதனத்தில் வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தல் இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒரு ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு மத்தியில் 56 செயற்திட்டங்கள் இறுதிப் பரிசோதனை அறிக்கைகளை வழங்கியிருக்கவில்லை. இதன் காரணமாக அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் மிகுதி செயற்திட்ட அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்த போதிலும், அவற்றிற்குரிய செயற்பாடுகள் முறையான வகையில் இடம்பெற்றிருந்தது என்பது ஆராய்ச்சிப் பத்திரத்தை பிரசித்தப்படுத்தல் மற்றும் 6 தொழில்நுட்ப ஒப்படைப்புக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தற்பொழுது அந்த இறுதி | ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆராய்ச்சி அறிக்கையை நாளதுவரையாக சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கை கிடைத்துள்ளதுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கலாம். | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் மூலம் தொழில்நுட்ப ஒப்படைப்புக்களுக்காக ரூபா 1,610,000 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது என்பது இனங்காணப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கான ரூபா 61,449,858 செலவு மற்றும் ஆராய்ச்சிப் படிக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 33,980,404 ஆக ரூபா 95,430,262 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு செலவு செய்யப்பட்ட பணங்களுக்கு பொருளாதார நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2015 - 2019 காலப்பகுதிக்காக தொழில்நுட்ப ஒப்படைப்புக்களின் மூலம் உழைக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 17,430,270 ஆகும். தொழில்நுட்ப ஒப்படைப்புக்களின் மூலமான நலன்கள் நிர்ணயிக்கப்பட்ட ஒரு ஆண்டிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாததுடன் அதன் மூலம் நீண்ட காலத்திற்கு பொருளாதார நலன்கள் கிடைக்கின்றது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஆராய்ச்சிக்காக செலவு செய்யப்படுகின்ற பணத்திற்கு நியாயமான நலனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் ஆராய்ச்சிகளின் மூலம் கிடைக்கின்ற சமூக பொருளாதார நலன்களை இனங்கண்டு அவற்றினை அறிக்கையிடுவதற்கு முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| LIMS கணனி முறைமையை ஸ்தாபிப்பதற்காக கணனிப் பிரிவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,549,321 பெறுமதியான Rack Mountable Server முறைமை 2019 செப்தெம்பர் 05 ஆந் திகதி நிறுவனத்திற்கு கிடைத்திருந்தும் 2020 யூன் 23 ஆந் திகதி வரை அது பயன்பாட்டிற்கு எடுத்தக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். ISS கணனி முறைமைக்கு Intergrated Software System (Science Land Pvt Ltd.) இந்த உத்தியோகத்தர்கள் ISS மென்பொருளுக்கான தேவையான அடிப்படை ஆய்வு நடவடிக்கைகள் உரிய பிரிவுகளுடன் | நிறுவனம் கொள்வனவு செய்கின்ற சொத்துக்களை உரிய செயற் திட்டத்தறகாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், அக்கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் மென்பொருட்களை ஸ்தாபிக்கும் அடிப்படை வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இதனை 08 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அப்போதைக்கு உரிய Rack Mount Server முறைமையை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளலாம்.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| தொழில்நுட்ப உபகரணங்களின் சர்வதேச சந்தைகளில் காணப்படுகின்ற விலைகளை இனங்காண்பதற்கான முறையான நடைமுறை நிறுவனத்தினால் இனங்காணப்படாததன் காரணமாக அப்பெறுகைகளுக்குரிய கிரய மதிப்பீட்டினைத் தயாரிப்பதில் பலவீனங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 12 உபகரணங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீடு 25 சதவீதத்திலிருந்து 107 சதவீதம் வரை விலைகள் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இதன்போது கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சந்தை விலைகளின் அடிப்படையிலும் இணையத்தளத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள சந்தை விலைகளின் அடிப்படையிலும் மூலதனப் பொருட்களின் மதிப்பீட்டு விலை தீர்மானிக்கப்படும். அந்த விலைகள் பொருட்களின் உண்மையான பெறுமதி அல்லாததுடன் அப்பொருட்களை இறக்குமதி செய்யும் போது செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வைகள் களஞ்சிய கட்டணம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் சேர்த்துக் கொள்கையில் மற்றும் நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைதல் பொருட்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை விட அதிக பெறுமதி நிலவுதல் முதலிய அக்காரணிகளின் | தொழில்நுட்ப உபகரணங்களின் சர்வதேச சந்தையில் காணப்படுகின்ற விலைகளை இனங்காண்பதற்கு முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப் பட்டு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக சரியான நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து உள்ளபடியான பெறுமதி அதிகரித்திருந்தது. | |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சிரேஷ்ட கணனி முறைமைப் பொறியியலாளரை உள்ளடக்கி 06 பதவிகள் பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு தாமதித்தமைக்கு தகமையுள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாமை, நேர்முகப் பரீட்சைக் குழு எவரையும் சிபார்சு செய்திருக்காமை என்பன காரணமாக இருந்ததுடன் மீண்டும் சில பதவிகளுக்காக அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் சில பதவிகளுக்காக முகாமைத்துவ திணைக்களத்திற்கு ஒரு கடிதத்தை அனுப்புதல் என்பன இடம்பெற்று மிகுதிச் செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நடைமுறை ஆண்டின் போது பதவிநிலை, பதவி நிலையற்ற மற்றும் ஏனைய பதவியணியிலுள்ள பதவிகள் முறையே 29, 20 மற்றும் 09 ஆக 58 மொத்த எண்ணிக்கையான பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக பணிப்பாளர் நாயகம் மற்றும் பொறியியலாளர் பதவிகளுக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் அவை முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்டது.<br><br>நிறுவன செயலாளர் மற்றும் பிரதான உள்ளக கணக்காய்வாளர் நேர்முகப் பரீட்சையை நடாத்தியதுடன் | பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நேர்முகப் பரீட்சையின் மூலம் எந்த விண்ணப்பதாரரையும் தெரிவுசெய்து நியமிப்பதற்கு நேர்முகப் பரீட்சை சபை சிபார்சு செய்திருக்கவில்லை. பிரதான ஆராய்ச்சி தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் கிடைத்திருக்கவில்லை. | |
| (இ) | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்பாடுகளை வணிக மட்டத்தில் பேணுவதற்காக மருந்துகள் மற்றும் பெற்றோலிய ஆய்வுகூடத்திற்கு கூட்டு மொத்தமாக 47 ஊழியர் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பதவிகளில் பதவிநிலை, பதவிநிலையற்ற மற்றும் ஏனைய பதவியணியினர் பதவிகள் முறையே 21, 18 மற்றும் 8 பதவிகள் நடைமுறை ஆண்டின் போது வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் அதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான ஆராய்ச்சி விஞ்ஞானி / பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர் (03) மற்றும் சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி / சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் (06) பதவிகளுக்காககவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்த்தல் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக தற்காலிகமாக கைவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன். புதிய மருந்துகள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை ஆய்வு கூடங்களின் ஆராய்ச்சி விஞ்ஞானி / ஆராய்ச்சி விஞ்ஞானி / ஆராய்ச்சி பொறியியலாளர் (12) பதவிகளுக்காகவும் 2020 பெப்ரவரி 19, 20 மற்றும் 21 ஆந் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் தற்பொழுது அப்பதவிகளுக்காக 09 நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். | பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பிரதான உள்ளக கணக்காய்வாளல் (HM 1-3) 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் 4 தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் தகைமைகள் கொண்ட ஒரு விண்ணப்பதாரரை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தது. | பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளல் இடம்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |